இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 10-08-2024

# வெல்க வினேஷ் போகத்!

**சோதனையைச் சாதனை ஆக்கிய 'இந்திய மகள்' வினேஷ் போகத். அவருக்கு பதக்கம் கிடைக்காமல் போயிருக்கலாம், ஆனால் அவரை உலகமே கொண்டாடிக் கொண்டு இருக்கிறது. இந்தியா சார்பில் போட்டியில் பங்கெடுக்கச் சென்றார். உலக நாடுகளின் பிரதிநிதியாக உயர்ந்து நிற்கிறார்.**

**காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் 3 தங்கம், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 1 தங்கம், ஆசிய சாம்பியன்ஷிப்பில் 88 பதக்கங்கள், உலக சாம்பியன்ஷிப்பில் 2 பதக்கங்கள் வென்ற வீரர்தான் வினேஷ் போகத்.**

வினேஷ் போகத் நடத்திய மல்யுத்தமானது மைதானத்தில் மட்டுமே நடந்தவை அல்ல. இந்தச் சமூகத்துக்கு எதிராக, ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக, பாலியல் குற்றவாளிக்கு எதிராக, ஆணாதிக்க கொடூரத்துக்கு எதிராக யுத்தம் நடத்தினார். அதிலும் அவரை வீழ்த்தினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

2023 ஆம் ஆண்டு முழுக்கவே அவரது மல்யுத்தம், ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்கொள்வதாக இருந்தது. 2023 ஜனவரி 18 ஆம் தேதி மல்யுத்த வீராங்கனைகள் வினேஷ் போகத், சாக்ஷி மாலிக், பஜ்ரங் புனியா ஆகியோர்பிரிஜ்பூஷன்ஷரன்சிங்மீதுபலகடுமையானகுற்றச்சாட்டுகளைச் சுமத்தினர். பா.ஜ.க.வின் எம்.பி.யான இவர், இந்திய மல்யுத்த கூட்டமைப்புத் தலைவராகவும் இருக்கிறார். பிரிஜ் பூஷண் சிங், பா.ஜ.க. எம்.பி.யாக இருப்பதால் மட்டுமே காப்பாற்றப் பட்டார். பிரிஜ் பூஷன் சிங்கும், பயிற்சியாளரும், தேசிய முகாமில் பெண் மல்யுத்த வீரர்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவதாக வினேஷ் போகத் கதறினார்.

ஊடகங்களில் இது பெரிதாக ஆனதும், வேறு வழியில்லாமல் ஐந்து பேர் கொண்ட விசாரணைக் குழுவை அமைத்தார்கள். மூத்த குத்துச்சண்டை வீராங்கனை எம்.சி.மேரி கோம் தலைமையில் அமைக்கப்பட்ட குழு, அறிக்கை கொடுத்ததே தவிர, நடவடிக்கைகள் ஏதுமில்லை. எனவே, ஏப்ரல் 21 ஆம் தேதி, பிரிஜ்பூஷன் சிங்குக்கு எதிராக கனாட் பிளேஸ் காவல் நிலையத்திற்குப் புகார் செய்ய மல்யுத்த வீராங்கனைகள் சென்றார்கள். ஆனால் போலீஸார் எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யவில்லை. ஏப்ரல் 23 ஆம் தேதி மீண்டும் போராட்டம் தொடங்கினார்கள். "ஏன் வழக்குப் பதியவில்லை?" என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது. அதன்பிறகுதான் ஏப்ரல் 30 ஆம் தேதி வழக்கு பதியப்பட்டது.

அப்போது அனைத்து விளையாட்டு வீரர்களையும் நோக்கி, 'கிரிக்கெட் வீரர்கள் மற்றும் பிற விளையாட்டு வீரர்கள் ஏன் அமைதியாக இருக்கிறார்கள்?' என்று கேள்வி எழுப்பியவர் தான் வினேஷ் போகத்! அதன்பிறகுதான் ஒரு சிலர் பொதுவெளியில் கேள்விகள் எழுப்பினார்கள். அனைவரையும் இந்தக் கொடூரத்துக்கு எதிராக துணிச்சலாகப் பேச வைத்தவர் வினேஷ் போகத். 'போக்சோ' சட்டத்தில் பதியப்பட்ட வழக்கை வாபஸ் வாங்க வைத்தார்கள். பா.ஜ.க. எம்.பி.யை கைது செய்யாமலேயே வழக்கு விசாரணை நடத்தினார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரிஜ் பூஷனுக்கு பா.ஜ.க. தொகுதி ஒதுக்குவதாக இருந்தது. கடுமையான எதிர்ப்புக்குப் பிறகு அவரது மகனுக்கு தொகுதி ஒதுக்கினார்கள். ('பா.ஜ.க.வின் வாரிசு அரசியல் எதிர்ப்பு' இதுதான்!)

இந்த அரசியல் யுத்தத்தில் இருந்ததால் கடந்த ஓராண்டாக வினேஷ் போகத்தால் சரியான பயிற்சி பெற முடியவில்லை. இவ்வளவு தடைகளைக் கடந்துதான் ஒலிம்பிக் சென்றார் வினேஷ் போகத். பாரீஸில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டியில் இறுதிச் சுற்றுக்கு முன்னேறி சாதனையுடன் பதக்கத்தை ஆகஸ்ட் 6ஆம் தேதி உறுதி செய்தார் வினேஷ் போகத். மகளிருக்கான மல்யுத்தத்தில் 50 கிலோ எடைப்பிரிவுக்கான களம் இது. இதில் இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார். ஒலிம்பிக் மல்யுத்தத்தில் இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார்.

**ஜப்பானைச் சேர்ந்த யுய் சுசாகியை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார் வினேஷ் போகத். நான்கு முறை உலகச் சாம்பியன் பட்டம் பெற்றவர் இந்த யுய் சுசாகி. எதிலும் இதுவரை தோற்காத வீரர் அவர். இதுவரை 82 பதக்கங்களைப் பெற்ற அவரையே வீழ்த்தினார் வினேஷ் போகத். அதன் பிறகு உக்ரைனைச் சேர்ந்த ஐரோப்பிய சேம்பியன் என்று அழைக்கப்படும் ஆக்சனா விவச்சையும் வினேஷ் போகத் வீழ்த்தினார். அடுத்து கியூபா வீராங்கனையான கஸ்மன் லோபஸையும் அரையிறுதியில் வீழ்த்தினார் வினேஷ் போகத். இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றார். இறுதிச் சுற்றில் வென்றால் தங்கம் கிடைக்கும், தோற்றால் வெள்ளி கிடைக்கும் என்ற நிலைமை தான் ஆகஸ்ட் 6 ஆம் தேதி இருந்தது. இந்த இடத்தில்தான் வினேஷ் போகத்தை இன்னொரு சதி வீழ்த்தியது.**

50 கிலோ எடைப்பிரிவு இது என்பதால், 50 கிலோவுக்குள் தான் எடை இருக்க வேண்டும். 100 கிராம் எடை அதிகமாக இருக்கிறது என்று சொல்லி தகுதி நீக்கம் செய்து விட்டார்கள். கண்ணுக்குத் தெரியாத சதிதான் இதற்குக் காரணம். 'பிரிஜ் பூஷன் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தன்னை ஒலிம்பிக்கில் பங்கேற்க விடாமல் சதி செய்கிறார்கள்' என்று கடந்த ஏப்ரல் மாதமே குற்றம் சாட்டி இருந்தார் வினேஷ் போகத். 'இவரின் வெற்றியை தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் சதி செய்துள்ளார்கள்' என்று 'இந்தியா' கூட்டணித் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

சுவிட்சர்லாந்தில் உள்ள விளையாட்டுக்கான நடுவர் நீதிமன்றத்தில் வினேஷ் போகத் முறையீடு செய்துள்ளார். தீர்ப்பு என்ன வரப்போகிறது என்று தெரியவில்லை. இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் பி.டி.உஷாவிடம் பிரதமர் மோடி சொல்லி இருப்பதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்குள் மல்யுத்தப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அவர் செய்துள்ள அறிவிப்பு அதிர்ச்சிக்குரியதாக இருக்கிறது. 'மல்யுத்தப் போட்டி என்னை வென்று விட்டது' என்று சொல்லி இருக்கிறார் வினேஷ் போகத்.

**இல்லை! உலகை வினேஷ் போகத் வென்றுவிட்டார். உலக மக்களின் மனங்களை வென்று விட்டார். மீண்டும் அவர் களத்துக்கு வருவார். வெல்வார். வெல்க!**

---

## தமிழ்நாட்டில்
## காவல் துறை அதிகாரிகள் பணியிட மாற்றம்!

சென்னை, ஆக.10-

தமிழகத்தில் 56 காவல் துறை அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தர விட்டது

தமிழ்நாடு முழுவதும் உள்ள 24 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பல் வேறு மாவட்டங்களின் காவல் கண்காணிப்பாளர்களை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டது

அதன்படி, மதுரை தெற்கு மண்டல அமலாக்கத்துறை காவல் கண்காணிப்பாளர் சுஜித் குமார், சென்னை துணை ஆணையராக இடமாற்றம் செய் யப்பட்டுள்ளார்.

சென்னை மத்திய குற்றப்பிரிவு துணை ஆணையராக இருந்த நிஷா, நீலகிரி மாவட்ட காவல் கண் காணிப்பாளராக நியமனம் செய் யப்பட்டுள்ளார்.

திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். திருவல்லிக்கேணி காவல் துணை ஆணையராக செல்வரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, மேலும் 32 காவல் துறை உயர் அதிகாரி களை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

மாநில மனித உரிமைகள் ஆணையரக காவல் கண்காணிப் பாளராக ஜெயலட்சுமி நியமனம் செய்யப்பட்டுள்ளார். கோவை தீவி ரவாத தடுப்புப்பிரிவு காவல் கண் காணிப்பாளராக வி.பத்ரி நாரய ணன் நியமனம் செய்யப்பட் டுள்ளார்.

சென்னை ரயில்வே காவல் கண்காணிப்பாளராக புளியந் தோப்பு துணை ஆணையர் ஈஸ்வரன் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.8.2024) முகாம் அலுவலகத்தில், திருநெல்வேலி மாநகராட்சி மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜி.இராமகிருஷ்ணன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் டி.பி.எம்.மைதீன்கான், சட்டமன்ற உறுப்பினர் எம்.அப்துல் வகாப் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.8.2024) முகாம் அலுவலகத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருமதி. ஆர்.ரங்கநாயகி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, கோயம்புத்தூர் மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக், துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன் ஆகியோர் உள்ளனர்.

---

## "சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு (2 ஆம் கட்டம்)
# இதுவரை ஒரு நிதியும் வழங்கவில்லை!" என ஒன்றிய அரசு ஒப்புதல்!
### மக்களவையில் தயாநிதி மாறன் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக. 10 -

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான ஒப்புதல், வழங்கவேண்டிய நிதி, கடந்த ஐந்தாண்டுகளில், மாநிலம் மற்றும் ஆண்டு வாரியாக மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அளிக்கப் பட்ட ஒப்புதல்களின் விவரங்கள் மற்றும் பிற மாநிலங் களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன என ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங் கள் துறை அமைச்சகத்திடம் மக்களவையில் எழுத்துப்பூர் வமான பதில்களுக்காக கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பி னார்.



அதன் விவரம் பின்வரு மாறு :

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண் டாம் கட்டத்திற்கென விநி யோகிக்க ஒப்புதல் அளித்த நிதியின் தற்போதைய நிலை என்ன என கேள்வி எழுப்பி னார்.

கடந்த மூன்று ஆண்டுக ளாக இத்திட்டத்திற்கான நிதியை வழங்க அனுமதிப்ப திலும், நிலுவையில் உள்ள தொகையினை விடுவிப்பதி லும் ஏற்படுகின்ற தாமதத் திற்கான காரணங்கள் என்ன என்றும் மேலும் அவற்றை சரிசெய்து அதன் செயல்முறைகளை விரைவு படுத்த மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் என்ன எனவும் கேள்வி எழுப்பினார்.

மெட்ரோ இரயில் திட் டத்தின் இரண்டாம் கட் டத்திற்கான (Phase II) நிதி வேண்டி தமிழ்நாடு அரசு எழுத்துப்பூர்வமாக அனுப் பிய கடிதங்களுக்கு ஒன்றிய அரசு அளித்த பதில்கள் என்ன என்றும் மேலும் அத் திட்டத்திற்கு உடனடியாக நிதி வழங்காமல் காலம் தாழ்த்துவதற்கான காரணம் என்ன எனவும் கேள்வி எழுப்பினார்.

கடந்த ஐந்தாண்டுகளில், மெட்ரோ இரயில் திட்டங் களுக்கு என அனுமதி அளிக் கப்பட்டு விடுவிக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதை மாவட்டம், மாநிலம் மற் றும் ஆண்டுவாரியாக பட்டி யலிட்டு தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவ காரங்கள் துறை இணை அமைச்சர் டோகன் சாஹூ அவர்கள் அளித்த பதிலில் சென்னை மெட்ரோ இரயி லின் இரண்டாம் கட்டத் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு முன்மொழியப்பட் டுள்ள 118.9 கி.மீ கொண்ட வழித்தடத்திற்காக கணக்கி டப்பட்ட திட்ட மதிப்பு ரூ. 63,246 கோடி. இதுபோன்ற அதிக மதிப்பீடு கொண்ட திட்டங்களுக்கு அத்திட்டத் தின் சாத்தியக்கூறுகள் மற் றும் நிதி இருப்பின் தன்மை யைப் பொறுத்தே ஒப்புதல் வழங்கப்படும். மேலும் தற்போது சென்னை மெட்ரோ இரயிலின் இரண் டாம் கட்டத் திட்டமானது மாநில அரசின் திட்டமாக செயல்பட்டு வருகிறது, எனவே அத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான செலவினத்தை தமிழ்நாடு அரசே தற்போது செலவ ழித்து வருகிறது என்று தெரி வித்தார்.

இவ்வாறு மேற்கூறப்பட் டுள்ள ஒன்றிய அரசின் பதில் மிகுந்த அதிர்ச்சியை அளிக்கிறது. கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முந்தைய பட்ஜெட்டில் ஒன்றிய நிதியமைச்சர் நிர் மலா சீதாராமன், சென்னை மெட்ரோ இரயில் திட்டத் தின் இரண்டாம் கட்டத் திற்கு ரூ.63000 கோடி ஒதுக் கீடு செய்ததாக அறிவித்தார். அவ்வாறு அறிவித்துவிட்டு இன்றுவரை அத்திட்டத்திற் கென ஒரு ரூபாய்கூட விடு விக்காமல் இழுத்தடிப்பதன் மூலம் தமிழ்நாட்டு மக் களை ஒன்றிய அரசு வஞ்சிக் கிறது.

---

## விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்
# திண்டிவனத்தில் கலைஞரின் நினைவு தினம் - அமைதிப் பேரணி!
### திருவுருவப்படத்திற்கு கழகத்தினர் மலரஞ்சலி!

திண்டிவனம், ஆக. 10-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு தினம் ஆக. 7 அன்று தமிழகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டது. இதை முன்னிட்டு விழுப் புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனத்தில் அமைதி பேரணியும் கலைஞரின் திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யும் நிகழ்ச்சி திண்டிவனம் பழைய நகராட்சி அலுவல கம் எதிரில் நடைபெற்றது.

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழிகாட்டுதலின்படி திண் டிவனம் பழைய இந்திரா காந்தி பேருந்து நிலையத்திலிருந்து அமைதி பேரணி தொடங்கியது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர் தலைமை யில் நடைபெற்ற அமைதி பேரணியில்முன்னாள் சட் டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன்,சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட பொருளாளர் ரமணன், திண்டிவனம் நகர செயலா ளர் கண்ணன், திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர் மலா ரவிச்சந்திரன்,ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம்,வல்லம்ஒன் றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் செயற்குழு உறுப்பினர் சீனி ராஜ்,பொதுக்குழு உறுப்பி னர் கதிரேசன்,உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் அமைதி ஊர்வலமாக சென்று பழைய நகராட்சி அலுவல கம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத் தமிழறிஞர் கலைஞர் அவர் களின் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரி யாதை செலுத்தினர்.

இதில் ஒன்றிய செயலா ளர்கள் அண்ணாதுரை, ராஜாராமன், மணிமாறன், பழனி,துரை, செழியன், இளம்வழுதி, உள்ளிட்ட மாநில, மாவட்ட ,ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணி நிர்வாகிகள் ஊர்வல மாகச் சென்று அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்த மிழறிஞர் கலைஞரின் திரு வுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரி யாதை செலுத்தினர்.



திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு திருவுருவச்சிலை காட்டூர் ஆயில் மில் செக்போஸ்ட் அருகில் 07.08.24 அன்று திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் – பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் முதல்வர் – கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால், திறக்கப்பட்டது. இதனை முன்னிட்டு 08.08.2024 அன்று கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநகரக் கழக செயலாளர் மு.மதிவாணன், காட்டூர் பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், மாமன்ற உறுப்பினர் செந்தில், வட்டக்கழகச் செயலாளர் முருகானந்தம் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.